Date: November 11, 2022
Place: Chennai

**Ref: SHAI/B & S/SE/142/2022-23**

To,
The Manager
Listing Department
BSE Limited
Phiroze Jeejeebhoy Tower
Dalal Street
Mumbai – 400001
**Scrip Code: 543412**

To
The Manager
Listing Department
National Stock Exchange of India Limited
Exchange Plaza, 5th Floor, Plot C/1,
G Block, Bandra-Kurla Complex
Mumbai – 400051.
**Scrip Code: STARHEALTH**

Dear Sir(s),

**Newspaper Advertisement –Financial Results September 30, 2022.**

Further to our letter dated SHAI/B & S/SE/137/2022-23 dated November 9, 2022 in compliance with Regulation 47 of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, please find enclosed copy of the extract of Unaudited Financial Results for the quarter and half year ended September 30, 2022 published in Business Standard (English Edition) and Dinamani (Tamil Edition).

Kindly take the same on record.

The above information is also being hosted on the Company's website at www.starhealth.in

Thanking you,

**For Star Health and Allied Insurance Company Limited**

JAYASHREE SETHURAMAN
Digitally signed by JAYASHREE SETHURAMAN
Date: 2022.11.11 11:32:50 +05'30'

**Jayashree Sethuraman,**
**Company Secretary & Compliance Officer**

## பட்டாசு ஆலை விபத்து: ஆளுநர், தலைவர்கள் இரங்கல்

**சென்னை, நவ.10:** பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஆளுநர், தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**ஆளுநர் ஆர்.என். ரவி:** மதுரை பட்டாசு ஆலை விபத்தில் மதிப்புமிக்க உயிர்களை இழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கல். காயமடைந்தவர்கள் விரைவில் குணமாக பிரார்த்திக்கிறேன் என்றார்.

**எடப்பாடி பழனிசாமி (அதிமுக):** மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே வடக்கம்பட்டியை அடுத்துள்ள அழகுசிறையில், பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் அங்கு பணியாற்றி வந்த 5 பேர் உயிரிழந்த செய்தியறிந்து மிகுந்த மனவேதனை அடைந்தேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல். பட்டாசு ஆலைகளில் உரிய பாதுகாப்பு அம்சங்களுடன் செயல்படுகின்றனவா என்பதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும்.

**அண்ணாமலை (பாஜக):** பட்டாசு ஆலையில் நிகழ்ந்த விபத்தில் 5 தொழிலாளர்கள் உயிரிழந்த சம்பவம் மிகுந்த மனவேதனை அளிக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு எனது ஆழ்ந்த இரங்கல்.

**ஜி.கே.வாசன் (தமாகா):** பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 5 பேர் உயிரிழந்திருப்பது மிகவும் வருத்தம் அளிக்கிறது. பட்டாசு ஆலைகள் விதிமுறைகளைப் பின்பற்றி செயல்படுகிறதா என்பதை அரசு தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

**கே.எஸ். அழகிரி (காங்கிரஸ்):** பட்டாசு வெடி விபத்தில் இறந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இறந்தவர்களின் குடும்பத்துக்கு தலா ரூ. 10 லட்சம் வழங்க வேண்டும்.

**கே.பாலகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட்):** வறுமையின்பிடியில் கிராம மக்கள் வேறு வழியில்லாமல் பட்டாசு ஆலையில் பணியாற்றுகின்றனர். பட்டாசு ஆலைகளில் இவர்களுக்கான பாதுகாப்பை முறையாக மேற்கொள்வதில்லை. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

## மழை தொடர்ந்தாலும் விவசாயிகளுக்கு பாதிப்பில்லை




**ஈரோடு, நவ.10:** தமிழகத்தில் மழை தொடர்ந்தாலும் விவசாயிகளுக்கு பாதிப்பில்லை என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

ஈரோடு அருகே மேட்டுக்கடையில் வியாழக்கிழமை மாலை நடந்த ஈரோடு தெற்குமாவட்ட திமுக துணைச்செயலாளர் ஆ.செந்தில்குமார் இல்ல திருமண வரவேற்பு விழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

திமுக ஆட்சி அமைந்தபோது கரோனா என்ற கொடிய நோய் பாதிப்பைச் சந்தித்தோம். அதில் இருந்து மீண்டபோது தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் தொடர் மழை பெய்தது. நான் 1996-ஆம் ஆண்டு சென்னை மேயராக பொறுப்பேற்றதற்கு அடுத்த நாள் முதல் சென்னையில் 10 நாள்கள் தொடர் மழை பெய்தது. அதுபோல தற்போதும் மழை தொடர்ந்து பெய்கிறது. நம்ம அதிர்ஷ்டத்தால் குடிநீர் பஞ்சமே இருக்காது. இது நம்ம ராசி, வாக்களித்த உங்கள் ராசி.

முன்பெல்லாம் சீர்திருத்த திருமணம், சுயமரியாதை உணர்வோடு நடந்தால், அதனை கேலி, கிண்டல் செய்து கொச்சைப்படுத்தியது உண்டு. ஆனால் இன்றைக்கு சீர்திருத்தத் திருமணம் இல்லை என்றால்தான் ஆச்சரியமளிக்கிறது. 1967-இல் அண்ணா முதல்வராகப் பொறுப்பேற்றபோது சீர்திருத்த திருமணங்கள் சட்டப்படி செல்லும் என்று உத்தரவிட்டதுதான் அதற்கு காரணம். தமிழகத்தில் மழை தொடர்ந்து பெய்வதால் விவசாயிகளுக்கு பாதிப்பில்லை. குடிநீர் பஞ்சமில்லாத சுபிட்சமான நிலையை ஏற்படுத்தியுள்ளோம். இந்த நிலையில், தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளையும், சொல்லாத வாக்குறுதிகளையும் நாம் நிறைவேற்றி வருகிறோம் என்றார்.

விழாவில் அமைச்சர்கள் சு.முத்துசாமி, வி.செந்தில்பாலாஜி, மு.பெ.சாமிநாதன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் ஈவிகேஎஸ்.இளங்கோவன், ஈரோடு எம்.பி. அ.கணேசமூர்த்தி, எம்எல்ஏக்கள் திருமகன் ஈவெரா, ஏ.ஜி.வெங்கடாசலம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மாலத்தீவு தீ விபத்து: முதல்வர் வேதனை

**சென்னை, நவ. 10:** மாலத்தீவில் நடந்த தீ விபத்தில் பலியானோர் செய்தி அறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வேதனை அடைந்துள்ளார். இதுகுறித்து, புதன்கிழமை அவர் வெளியிட்ட ட்விட்டர் பதிவு:-

மாலத்தீவில் ஏற்பட்ட தீ விபத்தில் பலர் உயிரிழந்த செய்தியறிந்து மிகவும் வேதனை அடைந்தேன். இந்த விபத்தில் உயிரிழந்த தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களின் உடல்களைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை ஒருங்கிணைக்கும் மத்திய அரசின் குழுவுடன் தொடர்பில் இருக்கிறோம் என்று தனது பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## புதிதாக 88 பேருக்கு கரோனா பாதிப்பு

**சென்னை, நவ.10:** தமிழகத்தில் 88 பேருக்கு கரோனா தொற்று வியாழக்கிழமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக சென்னையில் 21 பேருக்கும், கன்னியாகுமரியில் 10 பேருக்கும் கரோனா பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

மக்கள் நல்வாழ்வுத் துறை தகவல்படி மாநிலம் முழுவதும் தற்போது 826 பேர் சிகிச்சையில் உள்ளனர். புதன்கிழமை நிலவரப்படி 124 பேர் வீடு திரும்பியுள்ளனர். இதன் மூலம் கரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கை 35,54,333- ஆக உயர்ந்துள்ளது.

## சிஎம்சி கல்லூரி ராகிங் புகார்: மாணவர்கள் 7 பேர் மீது வழக்கு

**வேலூர், நவ. 10:** வேலூர் சிஎம்சி மருத்துவக் கல்லூரி ராகிங் புகார் தொடர்பாக 7 சீனியர் மாணவர்கள் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

வேலூர் சிஎம்சி கல்லூரி ராகிங் தடுப்புக் குழுவுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை (நவ. 6) மின்னஞ்சல் மூலம் பெயர் குறிப்பிடப்படாத ஒரு கடிதம் வந்தது. அதில், சிஎம்சியில் மாணவர்கள் தங்கும் விடுதியில் புதிதாகச் சேர்ந்த மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், ஆடைகளைக் களைந்து விடுதி வளாகத்தைச் சுற்றிவர வைத்து கொடுமை செய்யப்பட்டதாகவும், மேலும், இது தொடர்பான விடியோ காட்சிகளும் இணைக்கப்பட்டிருந்தன.

புகார் கடிதத்துடன் சமூக வலைதளங்களில் வெளியான அந்த விடியோவில், மாணவர்கள் அரைக்கால் சட்டையுடன் கல்லூரி தங்கும் விடுதியை சுற்றி வருவது, அவர்கள் மீது தண்ணீர் பீய்ச்சி அடிப்பது போன்ற காட்சிகளும் இடம்பெற்றிருந்தன.

இதன் அடிப்படையில், முதல்கட்ட நடவடிக்கையாக கடிதத்தில் குறிப்பிட்டிருந்த 7 சீனியர் மாணவர்களை கல்லூரி நிர்வாகம் இடை நீக்கம் செய்தது.

மேலும், இது குறித்து சிஎம்சி கல்லூரி முதல்வர் சாலமன் சதீஷ்குமார், பாகாயம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில், அந்தக் கல்லூரியின் 7 சீனியர் மாணவர்கள் மீது தமிழ்நாடு ராகிங் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட பிரிவுகளின்கீழ் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

## ‘டிஜிட்டல் நில அளவைப் பணிகள்: கேரள அரசின் செயல்பாடுகள் கண்காணிப்பு’



**சென்னை, நவ. 10:** டிஜிட்டல் நில அளவைப் பணிகள் தொடர்பாக, கேரள அரசின் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, வருவாய்த் துறை செயலாளர் குமார் ஜெயந்த், வியாழக்கிழமை வெளியிட்ட விளக்கம்:-

தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களுக்கு இடையிலான எல்லையில், டிஜிட்டல் முறையிலான மறுநில அளவை பணியை கேரள அரசு தொடங்கியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. கேரள மாநிலம் தொடுபுழா மறுநில அளவை அலுவலக உதவி இயக்குநர் தரப்பில் இருந்து தேனி மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் கடிதம் அனுப்பப்பட்டு இருந்தது. இந்தக் கடிதத்தில், கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் உடும்பன் சோலை வட்டத்தைச் சேர்ந்த சின்னக்கானல், சதுரங்கப்பாறை, கருணாபுரம், சாந்தான்பாறை ஆகிய கிராமங்களில் டிஜிட்டல் நில அளவை பணிகள் முதல் கட்டமாக மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கிராமங்களின் பொது எல்லைகள், தேனி மாவட்டத்தில் அமையப் பெற்றுள்ளன.

மாநில எல்லைகள் தொடர்புடைய பதிவேடுகளைத் தயார் நிலையில் வைத்துக் கொண்டு ஆலோசனைக் கூட்டம் நடத்துவதற்கான உரிய தேதி குறிப்பிட்டு தகவல் தெரிவிக்க வேண்டுமென கேரளத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, கூட்டு ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு மாவட்ட நிர்வாகத்தால் விரைவில் முடிவு செய்யப்படும்.

அதேசமயம், தமிழக கேரள மாநிலங்களுக்கு இடையிலான பொது எல்லையில் எந்தவிதமான டிஜிட்டல் நிலஅளவைப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என தேனி வனக்கோட்ட அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இரு மாநில பொது எல்லையில் கேரள அரசால் டிஜிட்டல் நில அளவை தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பதை கண்காணித்து அறிக்கை சமர்ப்பிக்க தமிழக வனச்சரகர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாக தனது செய்தியில் வருவாய்த் துறை முதன்மைச் செயலாளர் குமார் ஜெயந்த் தெரிவித்துள்ளார்.

## பிரதமர் மோடிக்கு சிறப்பான வரவேற்பு: அண்ணாமலை

**சென்னை, நவ. 10:** தமிழகம் வரும் பிரதமர் மோடிக்கு தமிழ் கலாசார முறைப்படி சிறப்பான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கை: தமிழ் மொழியின் மேன்மையை உலகமெங்கும் பெருமையோடு பிரதமர் மோடி பரப்பி வருகிறார். பிரதமர் தமிழகம் வரும்போதெல்லாம், தாய் மண்ணுக்கு திரும்பி வரும் தனி உற்சாகத்துடன் வருகிறார்.

அவர் தமிழ் மண்ணில் கால் பதிக்கும் போதெல்லாம், பெருமிதம் கொள்வதை நம்மால் உணரமுடியும். இம்முறை திண்டுக்கல் காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்க பிரதமர் மோடி வருகிறார்.

தமிழகத்துக்கு வருகை தரும் பிரதமர் மோடி முதலில் மதுரை விமான நிலையம் வருகிறார். பிறகு அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் திண்டுக்கல் செல்கிறார்.

பிரதமரின் வருகையால் தென் தமிழகமே விழாக்கோலம் பூண்டுள்ளது.

திண்டுக்கலுக்கு பிரதமர் வரும் வழியில் ஏராளமான பொதுமக்கள் உற்சாகமான வரவேற்பு கொடுக்கவுள்ளனர். ஆடலும், பாடலும், ஆரவார மேளமும், தமிழ் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.


**CHANGE OF NAME**

I, THUKARAM GAJENDRAN, alias GAJESNDRAN alias MUTHYALA THUKARAM GAJENDRAN S/o Thukaram R/O h.no 3, 2nd Street Ganapathipuram Pallikaranai, Chennai. Have changed my name to MUTHYALA GAJENDRAN with effective Oct 19, 2022.

**அறிவிப்பு**

10/02/2023 முதல் எங்களுடைய தங்க நகை கடன் மற்றும் அதை சார்ந்த அனைத்து செயல்பாடுகளையும் ஆயிரம் விளக்கு கிளையிலிருந்து (எண்.142, யு எச் சென்டர், 2வது மாடி, கிரீம்ஸ் சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை மாவட்டம், தமிழ்நாடு. பின் - 600 006. தொலைபேசி - 9072690963 / 9072694550) ஆயிரம் விளக்கு புதிய முகவரிகிளைக்கு (எண்.3, பவானி மேன்ஷன், 4வது லேன், நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை மாவட்டம், தமிழ்நாடு. பின் - 600 034. தொலைபேசி - 9072690963 / 9072694550) இடமாற்றம் செய்யப்படுகிறது. அனைத்து வாடிக்கையாளர்களும் மேற்கண்ட விலாசத்தில் தொடர்ந்து எங்களுடைய சேவையை பெறலாம் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி எண்:

**Call : 9072602620 / 8605588095**

MANAPPURAM FINANCE LTD.
CIN-L65910KL1992PLC006623
IV/470A (old) W638A(New), Manappuram House, Valapad, Thrissur, Kerala- 680 567

**அறிவிப்பு**

10/02/2023 முதல் எங்களுடைய தங்க நகை கடன் மற்றும் அதை சார்ந்த அனைத்து செயல்பாடுகளையும் கோவிந்தன் சாலை, சென்னை கிளையிலிருந்து (பில்டிங் நம்பர்.45/13, 1வது மாடி, கோவிந்தன் சாலை, மேற்கு மாம்பலம், பாண்டியன் ஹார்டுவேர்ஸ் மாடி, சென்னை மாவட்டம், சென் 600 033. தொலைபேசி - 9072691165 / 9072694631) கோவிந்தன் சாலை, சென்னை புதிய முகவரிகிளைக்கு (பில்டிங் நம்பர்., பழைய நம்பர். 34, புதிய நம்பர். 34/, ஜெயந்தி பில்டிங், 1வது மாடி, கார்ட்மேன் தெரு, ரெட்டிக்குப்பம் சாலை, மேற்கு மாம்பலம், சென்னை மாவட்டம், பின் - 600 033. தொலைபேசி - 9072691165 / 9072694631) இடமாற்றம் செய்யப்படுகிறது. அனைத்து வாடிக்கையாளர்களும் மேற்கண்ட விலாசத்தில் தொடர்ந்து எங்களுடைய சேவையை பெறலாம் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி எண்:

**Call : 9072602624 / 8605588095**

MANAPPURAM FINANCE LTD.
CIN-L65910KL1992PLC006623
IV/470A (old) W638A(New), Manappuram House, Valapad, Thrissur, Kerala- 680 567





### அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏலத்துக்கான பொது அறிவிப்பு

IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்பு "இண்டியா இன்ஃபோலைன் ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிமிடெட்" என அறியப்படுவது) (IIFL-HFL) பெருநிறுவன அலுவலகம் - ப்ளாட் எண். 98, உத்யோக் விஹார், ஃபேஸ் -IV, குர்கான் - 122 015 (ஹரியானா) மற்றும் கிளை அலுவலகம் - பழைய எண். 41, புதிய எண். 76, ப்ளாக் எண். 1, நு டெக் பில்டிங், 3 வது தளம், 1 வது பிரதான சாலை, CIT நகர் மேற்கு, நந்தனம், சென்னை – 600 035 லேண்ட்மார்க் (ஹூண்டாய் ஷோரூம் அருகில்) அடமானம் செய்யப்பட்ட அசையா சொத்து பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 (இனிமேற்கொண்டு "சட்டம்" என்றே அழைக்கப்படும்) ன் கீழ் விற்பனை. இப்பவும், IIFL-HFL ன் அதிகாரப்பூர்வ அலுவலர் ("அ.அ"), பின்வரும் கடன் கணக்கு/கள் / வாய்ப்பு எண்களில், மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(2) ன் கீழ் வழங்கப்பட்ட அறிவிப்புக்கு பின்னிட்டு, பின்வரும் சொத்து/க்களை அதனை "இருக்கின்ற இடத்தில் & இருக்கின்ற நிலையில்" என்ற அடிப்படையில் விற்பனை செய்திடும் உரிமையுடன் IIFL-HFL க்கான நிலுவைகளை வசூலிப்பதற்காக சுவாதீனம் எடுத்துள்ளார். விற்பனையானது கீழ்க்கைொப்பமிட்ட நபரால் வலைதளம் ல் கொடுக்கப்பட்டுள்ள மின்னணு ஏல தளம் www.bankeauctions.com மூலம் கீழ்க்கையொப்பமிட்ட நபரால் நடத்தப்படும்.

| கடன்தாரர்(கள்) / கூட்டு கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) | கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை | அசையா சொத்து விபரம் / ஜாமீன் சொத்து | அடையாள சுவாதீன தேதி | அடிப்படை விலை |
|---|---|---|---|---|
| 1). திரு. ராஜேந்திரன் K 2). திருமதி. மஞ்சுளா R 3). Mrb எண்டர்ப்ரைசஸ் (கோப்பு எண். 751557) | 25 செப்டம்பர் 2019 ரூ. 27,91,140/- (ரூபாய். இருபத்து ஏழு இலட்சத்து தொண்ணூற்று ஓராயிரத்து நூற்று நாற்பது மட்டும்)<br>விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை ரூ.25,000/- (ரூபாய். இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) | சென்னை, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுக்கா, அயப்பாக்கம் கிராமம், லட்சுமி நகர், சர்வே எண். 396/5, பட்டா எண். 2712 ல் அமையப்பெற்ற ப்ளாட் எண். 4 ல் உள்ள ஏகாந்தா, முதல் தளத்தில் உள்ள ஃப்ளாட் எண். F-3 என்ற சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். (778 சதுர அடி கட்டிட மேற்பரப்பு கொண்டது) | 16.12.2019<br>மொத்த நிலுவைத்தொகை - 3 நவம்பர் 2022 ம் தேதியின் படி, ரூ. 33,52,085/- (ரூபாய். முப்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து எண்பத்து ஐந்து மட்டும்) | ரூ.29,25,300/- (ரூபாய். இருபத்து ஒன்பது இலட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து முன்னூறு மட்டும்)<br>டேவணித்தொகை - ரூ. 2,92,530/- (ரூபாய். இரண்டு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து ஐனூற்று முப்பது மட்டும்) |
| திரு. ரிச்சர்டுசன் திருமதி. ஷீபா அனிதா (கோப்பு எண். 784494, 782002, 950618) | 2022 மே 23 ம் தேதியின் படி, ரூ. 34,40,618/- (ரூபாய். முப்பத்து நான்கு இலட்சத்து நாற்பதாயிரத்து அறுனூற்று பதினெட்டு மட்டும்)<br>விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை ரூ.40,000/- (ரூபாய். நாற்பதாயிரம் மட்டும்) | இந்தியா, தமிழ்நாடு - 600 060, சென்னை, திருவள்ளூர், மாதவரம் கிராமம், காஞ்சி நகர் எக்ஸ்டன்சன், ப்ளாட் எண். B, நவ்கணேஷ் ட்யூலிப், ப்ளாக் A, இரண்டாவது தளத்தில் உள்ள 870 சதுர அடி கட்டிட மேற்பரப்பு கொண்ட ஃப்ளாட் எண். S1 என்ற சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். | 05.08.2022<br>மொத்த நிலுவைத்தொகை - 29 அக்டோபர் 2022 ம் தேதியின் படி, ரூ. 36,41,947/- (ரூபாய். முப்பத்தாறு இலட்சத்து நாற்பத் தோராயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தேழு மட்டும்) | ரூ.31,50,000/- (ரூபாய். முப்பத்து ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)<br>டேவணித்தொகை - ரூ. 3,15,000/- (ரூபாய். மூன்று இலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) |

| | | |
|---|---|---|
| சொத்து ஆய்வு தேதி: 2022 டிசம்பர் 07 – 11:00 மணி முதல் 14:00 மணி வரை. தொடர்பு நபர் - ஃப்ரேசர் R @ 93800 14400 | டேவணித்தொகைக்கான தடைசி தேதி: 2022 டிசம்பர் 09 மாலை 05:00 மணி வரை | மின்னணு ஏல தேதி / நேரம்: 2022 டிசம்பர் 14 - 11:00 மணி முதல் 13:00 மணி வரை |

பணப்பட்டுவாடா முறை – அனைத்து தொகையும் "IIFL Home Finance Limited" என்ற பெயரில் குருக்ராமில் செலுத்தப்படக்கூடிய கேட்பு வரைவோலை அல்லது RTGS/NEFT மூலம் செலுத்தப்பட வேண்டும். கணக்குகளின் விபரங்களாவன பின்வருமாறு – A). கணக்கு பெயர் :- IIFL Home Finance Ltd., B). வங்கியின் பெயர் :- ஸ்டேண்டர்டு சார்டர்டு பேங்க் C). கணக்கு எண் :- 9902879 D). IFSC Code :- SCBL0036001 E) வங்கி முகவரி : Standard Chartered Bank, 90 M.G. சாலை, கோட்டை, மும்பை – 400 001

**விதிகள் மற்றும் நிபந்தனைகள் -**

1. மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்காக, விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்களது விபரங்களை சேவைதாரரின் வலைதளம் https://www.bankeauctions.com ல் முன்கூட்டியே பதிவு செய்து, உள்நுழை கணக்கு, உள்நுழை அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்க வேண்டும். விருப்பமுள்ள ஏலதாரர்கள் டேவணித்தொகை, KYC மற்றும் PAN அட்டை ஆகியவற்றின் நகலுடன் சேர்த்து தங்களது விலைப்புள்ளிகளை "Tender FORM" ல் சமர்ப்பிக்க வேண்டும் / அனுப்ப வேண்டும்.
2. ஏலதாரர்கள் தங்களது விலைப்புள்ளிகளை இதன் கீழ்க்கண்ட "விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை" என்ற களத்தில் கண்டவாறு அதிகரிக்க வேண்டும். ஏலம் முடிவுறு நேரத்தின் கடைசி 5 நிமிடத்தில் விலைப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்டால், முடிவுறு நேரம் தன்னியல்பாக 5 நிமிடங்கள் அதிகரிக்கும்.
3. வெற்றி பெற்ற ஏலதாரர், விலைத்தொகை (டேவணித்தொகைய கழித்து) யின் 25% தொகையை ஏலதாரரால் விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்ட 24 மணி நேரத்துக்குள் செலுத்த வேண்டும்., மேலும் விலைத்தொகையின் மீதி 75% தொகையை ஜாமீன் பெற்று கடனளித்தவரால் விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அனைத்து தொகையும் பரிந்துரைக்கப்பட்ட முறையில் மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.
4. வாங்குபவர் துணை வரி, பொருந்தத்தக்க முத்திரை தீர்வை, கட்டணம் மற்றும் இதர சட்டபூர்வ நில்வைகள் அல்லது நகராட்சி வரி, மின் கட்டணங்கள் போன்ற இதர நிலுவைகள் மற்றும் இதர நிகழ் செலவுகள், கட்டணங்கள், வரிகள் மற்றும் சொத்து தொடர்பான இதர தொகைகளையும் வெற்றி பெற்ற ஏலதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.
5. ஏலதாரர்கள் ஏல விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகள் & ஏல விண்ணப்ப படிவம் ஆகியவற்றுக்கும், மின்னணு ஏல விற்பனை செயல்முறைகளில் பங்கேற்று தங்களது விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன்பே வலைதளம் https://bankeauctions.com மற்றும் https://www.iifl.com/home-loans/properties-for-auction யை பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
6. விபரங்களுக்கும், உதவிக்கும், செயல்முறைக்கும் ஆன்லைன் பயிற்சிக்கும் உத்தேச ஏலதாரர்கள் சேவைதாரரை மின்னஞ்சல் முகவரி - support@bankeauctions.com , உதவிக்கான எண்கள் : @ 7291981124 / 25 / 26 ல் தொடர்பு கொள்ளலாம், மேலும் சொத்து தொடர்பான விசாரணைகளுக்கு திரு. ஜிதேந்திர குப்தா அவர்களை @ 9999682823, மின்னஞ்சல் :- jitendra.gupta1@iifl.com லும் தொடர்பு கொள்ளலாம்.
7. இதன் மூலம் இதன் மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள் அறிவிக்கப்படுவது யாதெனில், இயற்சுவாதீனம் எடுப்பதற்கு 7 நாட்களுக்கு முன்பே ஜாமீன் சொத்தில் உள்ள வீட்டு உபயோக பொருட்களை எடுத்துக்கொள்ள வேண்டும்., இல்லையெனில் IIFL-HFL இவ்வாறான சூழலில் சொத்துக்கு ஏதேனும் இழப்பு ஏற்பட்டால் அதற்கு பொறுப்பல்ல.
8. மேலும் கடன்தாரர்/களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், மேற்சொன்ன பொருட்களை எடுத்துக்கொள்ள தவறும் பட்சத்தில் அதனையும் சட்டப்படி விற்பனை செய்யப்படும்.
9. வெற்றி பெற்ற ஏலதாரரால் / ஏலத்தில் வாங்குபவரால் உரிய காலக்கெடுவுக்குள் தொகை செலுத்துவதில் எந்த நிலையில் தவறிழைக்கப்பட்டாலும், விற்பனை ரத்து செய்யப்பட்டு, ஏற்கனவே தொகையை (டேவணித்தொகை உட்பட) அபராதமாக கருதி கழித்துக்கொள்ளப்படும்., மேலும் சொத்து மறு விற்பனை செய்யப்படும்.
10. அதிகாரப்பூர்வ அலுவலர், எக்காரணமும் கூறாமல், விலைப்புள்ளி / ஏலத்தை ஒத்தி வைக்கவோ / ரத்து செய்வதோ அல்லது விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றவோ உண்டான உரிமைகளை கொண்டவராவார். விலைப்புள்ளி / ஏலத்தில் ஏதேனும் பிரச்சினை இருப்பின், அது தொடர்பாக IIFL-HFL ன் அதிகாரப்பூர்வ அலுவலரின் முடிவே இறுதியானது.

**சர்ஃபாசி சட்டம் 2002 ன் விதி 8(6)ன் கீழான 30 நாட்களுக்கு முந்தைய விற்பனை அறிவிப்பு**

இதன் மேற்குறிப்பிட்ட தொகையை நாளது தேதி வரையிலான வட்டி மற்றும் இதர செலவுகளுடன் சேர்த்து விலைப்புள்ளி / ஏல தேதிக்கு முன்பே செலுத்த கடன்தாரருக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது, தவறும் பட்சத்தில், சொத்து ஏலம் விடப்படும் / விற்பனை செய்யப்படுவதோடு, மீதி நிலுவை ஏதேனும் இருப்பின், அது வட்டி மற்றும் செலவுகளுடன் வசூலிக்கப்படும்.

இடம்: சென்னை, தேதி: 11 நவம்பர் 2022 — ஒப்பம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்

### IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்

IDFC FIRST Bank

((முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட் மற்றும் IDFC பேங்க் லிமிடெட்-நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது, தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது) | CIN : L65110TN2014PLC097792
பதிவு அலுவலகம்: KRM டவர்ஸ், 8வது தளம், ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை-600031.
தொ.பே.: +91 44 4564 4000 | தொலைநகல்: +91 44 4564 4022.

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம்-2002, பிரிவு 13(2)-ன் கீழ் அறிவிப்பு**

கீழ்க்காணும் கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக்-கடன்தாரர்கள், எமது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் வங்கியிடமிருந்து (முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட், IDFC பேங்க் லிமிடெட்-நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது, தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது) கீழ்க் காணும் ஈடு பெற்ற கடன் வசதிகளைப் பெற்றுள்ளனர். கீழ்க்காணும் கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக்கடன்தாரர்கள் பெற்றுள்ள கடன்களுக்கு ஈடாக தத்தமது சொத்துக்களை வங்கியிடம் அடமானம் வைத்துள்ளனர். அவர்கள் தங்களது கடன் ஒப்பந்தங்களின்படியான விதிமுறை நிபந்தனைகளைப் பின்பற்றத் தவறிவிட்டனர். எனவே, அந்தக் கடன் கணக்குகள் ஒழுங்கற்றதாக விட்டது. அதனால், அவை, RBI வழிகாட்டுதல்படி NPA (வாராக் கடன்கள்) என வகைப்படுத்தப் பட்டுள்ளன. அவர்களுக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி அவர்கள் IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் வங்கிக்கு (முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட், IDFC பேங்க் லிமிடெட்-நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது, தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் அறியப்படுகிறது) செலுத்த வேண்டிய கடன் பாக்கிகள் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளதோடு, அத்தொகைகள் மீது அந்தந்த தேதியிலிருந்து ஒப்புக்கொள்ளப்பட்ட வீதத்தில் பொருந்துகின்ற வட்டியும் சேர்த்து விதிக்கப்படும்.

| வ. எண் | கடன் கணக்கு எண் | கடன் வகை | கடன்தாரர்கள் / கூட்டுக் கடன்தாரர்கள் பெயர் | பிரிவு 13(2)-ன் படி அறிவிப்பு தேதி | பிரிவு 13 (2) அறிவிப்பின் படி நிலுவைத் தொகை | சொத்து முகவரி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16367631 | சொத்து மீதான கடன் | 1. தணிக்காச்சலம் V<br>2. ஃபைன் பிரிண்ட்ஸ் & பேக்கேஜிங்<br>3. கௌரி T | 15.10.2022 | ரூ. 11,91,324.77/- | நிலம் மற்றும் கட்டிடம், அவற்றின் முக்கிய பகுதிகளும், கதவு எண்.345/139, நிலத்தின் பிராப்பளவு 405 சதுர அடி மற்றும் 123.5 சதுர அடி அளவுள்ள பொதுவான பாதையுடன் ஆக மொத்தம் 528.5 சதுர அடி., மொத்தமுள்ள 3445 சதுர அடியில், சர்வே எண். 255 அமைவிடம் எண்.66, "பேப்பர் மில்ஸ் ரோடு", பெரவள்ளூர் கிராமம், பெரம்பூர்-புரசைவாக்கம் தாலுக்கா, சென்னை மாவட்டம்-600082 மற்றும் எல்லைகள்: கிழக்கு:5 அடி பொதுப் பாதை, மேற்கு: சொத்து திரு. நடராஜ நாயக்கருக்குச் சொந்தமானது, வடக்கு: சொத்து திரு. முத்துகிருஷ்ணனுக்குச் சொந்தமானது, தெற்கு: சொத்து திரு. இளங்கோவனுக்கு சொந்தமானது, அளவீடு: கிழக்கு - மேற்காக வடபுறம்:15 அடி, கிழக்கு - மேற்காக தென்புறம்:15 அடி, வடக்கு - தெற்காக கீழ்புறம்: 27 அடி, வடக்கு - தெற்காக மேல்புறம்: 27 அடி, மொத்தம் 528.5 சதுர அடி. அமைவிடம் : வட சென்னை பதிவு மாவட்டம், செம்பியம் துணைப் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. |

ஆகையால், இந்த அறிவுப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் நீங்கள் மேலே அட்டவணையில் காணும் விவரங்கள்படி கடன் பாக்கி தொகையுடன் மேற்படி தேதியிலிருந்து ஒப்பந்த வீதத்திலான எதிர்கால வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்கள் சேர்த்து முழுத்தொகையும் IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் (முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட், IDFC பேங்க் லிமிடெட்-நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது, தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது) வசம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். தவறினால், IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்-க்கு (முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட், IDFC பேங்க் லிமிடெட்-நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது, தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது) செலுத்தப்படவேண்டிய கடன் பாக்கியை வசூலிப்பதற்காக, கீழே கையொப்பமிட்டவர் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட கடனீட்டு சொத்துக்கள் மீது SARFAESI சட்டம் பிரிவு 13(4) மற்றும் பிரிவு 14-ன் கீழ் நடவடிக்கை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுவார். இதற்கிடையில் மேற்குறிப்பிட்ட சட்டம் பிரிவு 13(13)-ன்படி, மேற்குறிப்பிட்ட கடனீட்டு சொத்துக்களை எமது அனுமதியில்லாமல் விற்பனை, குத்தகை அல்லது வேறு இதர முறைகள் மூலம் பரிமாற்றம்/உரிமைமாற்றம் செய்வதற்கு தாங்கள் தடை விதிக்கப்படுகிறீர்கள் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

ஓம்/-
அதிகாரபூர்வ அலுவலர்
IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்
(முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட், IDFC பேங்க் லிமிடெட்-நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது, தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது)

தேதி: 11.11.2022
இடம்: சென்னை

### STAR HEALTH AND ALLIED INSURANCE CO LTD

STAR Health Insurance — Personal & Caring — The Health Insurance Specialist

Corp. Office: "Star Insurance Towers", No.1, New Tank Street, Valluvar Kottam High Road, Nungambakkam, Chennai - 600 034.
Toll Free No. : 1 800 425 2255, Website: www.starhealth.in
CIN: L66010TN2005PLC056649, Email: info@starhealth.in

**STATEMENT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND HALF YEAR ENDED SEPTEMBER 30, 2022**

(₹ in Lakhs)

| Sr. No. | Particulars | Three Months ended | | Six Months ended | | Year ended |
|---|---|---|---|---|---|---|
| | | Sep 30, 2022 Unaudited | Sep 30, 2021 Audited | Sep 30, 2022 Unaudited | Sep 30, 2021 Audited | March 31, 2022 Audited |
| 1 | Total Income from Operations (Note 1) | 3,19,290 | 2,88,468 | 5,65,656 | 5,06,978 | 11,46,347 |
| 2 | Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and / or Extraordinary Item) | 12,065 | (23,235) | 40,864 | (51,263) | (1,39,664) |
| 3 | Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and / or Extraordinary Item) | 12,065 | (23,235) | 40,864 | (51,263) | (1,39,664) |
| 4 | Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and / or Extraordinary Item) | 9,310 | (17,049) | 30,635 | (38,027) | (1,04,067) |
| 5 | Total Comprehensive Income for the period (Comprising Profit / (loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax) (Note 2) | NA | NA | NA | NA | NA |
| 6 | Paid up Equity Share Capital | 57,821 | 55,329 | 57,821 | 55,329 | 57,552 |
| 7 | Reserves (excluding Revaluation Reserve) | - | - | - | - | - |
| 8 | Securities Premium Account | 5,74,477 | 3,75,017 | 5,74,477 | 3,75,017 | 5,70,306 |
| 9 | Net Worth | 4,87,612 | 3,19,866 | 4,87,612 | 3,19,866 | 4,51,338 |
| 10 | Paid up Debt Capital / Outstanding Debt (Note 3) | 52,000 | 65,000 | 52,000 | 65,000 | 72,000 |
| 11 | Debenture Redemption Reserves (Note 3) | 300 | 1,500 | 300 | 1,500 | 1,500 |
| 12 | Earnings per share (face value of ₹10/- each) | | | | | |
| | 1. Basic (not annualised) (in ₹) | 1.61 | (3.10) | 5.32 | (6.93) | (18.65) |
| | 2. Diluted (not annualised) (in ₹) | 1.59 | (3.10) | 5.16 | (6.93) | (18.65) |
| 13 | Debt Equity Ratio (No. of times) | 0.11 | 0.20 | 0.11 | 0.20 | 0.16 |
| 14 | Debt Service Coverage Ratio (No. of times) | 8.80 | (34.48) | 13.73 | (38.86) | (29.59) |
| 15 | Interest Service Coverage Ratio (No. of times) | 8.80 | (34.48) | 13.73 | (38.86) | (29.59) |

Notes:

1. Total Income from Operations represents Gross Written Premium (GWP).
2. The Indian Accounting Standards (IND AS) are currently not applicable to Insurance Companies in India.
3. During the quarter and year to date ended September 30, 2022, the Company pursuant to the approval received from Insurance Regulatory and Development Authority of India (IRDAI) has exercised Call Option and redeemed the Subordinated debenture in full on September 06, 2022 amounting to Rs. 20,000 Lakhs including interest thereon. The corresponding debenture redemption reserve amounting to Rs. 1,200 Lakhs has been reversed and credited to profit and loss account.
4. The above results for the quarter and year to date ended Sep 30, 2022 were reviewed by the Audit Committee and adopted by the Board of Directors in their meeting held on November 09, 2022 and the Joint Statutory Auditors of the Company have carried out a 'Limited Review' of the same.
5. The above is an extract of the detailed format of quarterly and year to date Financial results filed with the Stock Exchange under Regulation 33 and 52 of the SEBI (Listing Obligations and Disclosure requirements) regulations, 2015. The full format of quarterly and year to date Financial results are available on the website of Stock Exchanges (www.nseindia.com) and (www.bseindia.com) and the Company (www.starhealth.in).

**Registration No. and Date of Registration with the IRDAI : 129/16.03.2006**

For and on behalf of Board of Directors
Sd/-
V. Jagannathan
Chairman and Chief Executive Officer
DIN: 01196055

Place: Chennai - 600 034
Date: November 09, 2022

SHAI/2022-23/PRINT(FR FOR QTR AND HALF YEAR ENDED 30-09-2022)/001. Insurance is the subject matter of solicitation. For more details on risk factors, terms and conditions please read the sales brochure carefully before concluding a sale. IRDAI clarifies to public that IRDAI or its officials do not involve in activities like sale of any kind of insurance or financial products nor invest premiums. IRDAI does not announce any bonus. Public receiving such phone calls are requested to lodge a police complaint along with details of phone call, number.